DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.48/2024**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முரளி | | : |
| த/பெ | : செல்வராஜ் | மதம் | : |
| கிராமம் | : அம்பத்தூர் | தொழில் | : Cable TV |
| வட்டம் | : சென்னை | வயது | : 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 06.03.2026**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>: PW1**

இவ்வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக நீதிமன்ற முத்திரையிட்ட தேதி ஆவணத்தின் படி 22.02.2024 ஆகும். இவ்வழக்கு தாக்கல் செய்ய காலவரம்பு முடிந்து 24 நாட்கள் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு என்றால் தெரியாது. இவ்வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகார் மனுவிலும் எவ்வாறு எதிரிக்கு பணம் கொடுத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் ரொக்க பணமாக கொடுத்தேன். எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் 2023 மார்ச் மாதம் ரூ.5,00,000/- மும், 2023 ஜீன் மாதம் ரூ.6,00,000/- மும், 2023 ஜீலை மாதம் ரூ.2,00,000/- மும், 2023, நவம்பர் மாதம் ரூ.3,00,000/- (சாட்சி மீண்டும் நவம்பர் மாதத்தில் ரூ.3,00,000/- இல்லை ரூ.6,00,000/- என்று தெரிவித்தார்) இவ்வழக்கில் தாக்கல் செய்த இரண்டு காசோலையிலும் எதிரி கையெழுத்து மட்டும் தான் செய்துள்ளார் மற்ற விவரங்களை நானே நிரப்பி கொண்டேன் என்றால் சரியல்ல, 2023 அக்டோபர் மாதத்தில் காசோலை கொடுத்தார். காசோலை அக்டோபர் 2023 கொடுத்த பின்பு தான் நவம்பர் மாதத்தில்

ரூ.6,00,000/– கொடுத்தேன் என்றால் சரிதான். காசோலையை அக்டோபர் மாதம் வாங்கியதால் அதை வங்கியில் செலுத்த எதிரியிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். எனக்கும் பாபுஜீ க்கும் அசல் வழக்கு எண்.575/2024 என்ற வழக்கு பூந்தமல்லி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கிலும் பாபுஜீ என்பவரிடம் ரூ.20,00,000/– கொடுத்ததாகவும், அதற்கு ஒரு ஒப்பந்தம் போடப்பட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் கடன் கொடுக்கும் தொழில் செய்து வருவதாகவும், அதற்கு அடமானம் போட்டு வருவதாகவும், அவ்வாறு கடன் தரும் போது பாபுஜீ என்பவரிடம் பத்திரம் வாங்கி, இவ்வழக்கின் எதிரி ஜாமீன்தாராக இருப்பதற்கு பாதுகாப்பு காசோலை வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்த காலத்திலாவது வாங்கிய காசோலையை திருப்பி கொடுத்துள்ளாரா என்றால் கடைசியாக வாங்கிய பணத்தை திருப்பி தரவில்லை. அதற்கு முன்பு சிறு தொகையான ரூ.5,000/– ரூ.10,000/– வாங்கியதை திருப்பி செலுத்திவிட்டார். சிட்டி யூனியன் வங்கி சேமிப்பு கணக்கு எண்.26000100167727 எனது வங்கி கணக்கு எண் என்றால் சரிதான். 12.06.2023 ரூ.5,00,000/– மும், 13.06.2023 ரூ.5,00,000/– மும், 15.06.2023 ரூ.3,00,000/– மும் மொத்தத்தொகை ரூ.13,00,000/– எதிரி எனது வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். மேலே குறிப்பிட்ட தொகை எதற்காக எதிரி எனது கணக்கிற்கு அனுப்பினார் என்றால் 2021 ஆம் ஆண்டு பாபுஜீ தொழிலுக்கு வேண்டி பணம் வாங்கியிருந்தார் அந்த பணத்தை பாபுஜீ மதனகோபால் மூலம் எனக்கு செலுத்தினார். அசல் வழக்கு எண்.575/2024 என்ற வழக்கில் பாபுஜீ வாங்கிய பணத்தை திருப்பி செலுத்தவில்லை என்று தெரிவித்திருந்தேன் என்றால் அது வேறு பரிவர்த்தனையாகும் எனவே கூறவில்லை. பாபுஜீக்கு அனுப்பப்பட்ட

அறிவிப்பிலும் வேறு பரிவர்த்தனை உள்ளதாக கூறாமல் ரூ.20,00,000/- த்திற்கான பரிவர்த்தனை மட்டும் தான் புகாரில் தெரிவித்திருந்தேன் என்றால் சரியல்ல, அசல் வழக்கு நிலம் அடமானம் வைத்ததற்காக கொடுத்த பணமாகும். அவர் திருப்பி கொடுத்த பணம் வியாபாரத்திற்காக வாங்கிய பணமாகும். பாபுஜீ எதன் மூலம் பணத்தை திருப்பி செலுத்தினார் என்றால் பாபுஜீ, இவ்வழக்கின் எதிரி Gpay கணக்கின் மூலம் அனுப்பினார். பாபு தரவேண்டிய பணத்தை எதற்காக மதனகோபால் எனக்கு அனுப்பினார் என்றால் மதனகோபால் தான் முன்னின்று பணம் வாங்கி கொடுத்தார். மதனகோபால் முன் நின்று பணம் வாங்கி பாபுஜீயிடம் கொடுத்ததற்கு ஆவணம் ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை. மதனகோபால் எனக்கும் பாபுஜீக்கும் இடையே நடந்த பரிவர்த்தனைக்கு ஜாமீனாக நின்றார் என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். பாபுஜீ வாங்கிய கடனிற்கு மதனகோபால பிணையாக நின்று பணம் வாங்கி கொடுத்ததற்கு அவரிடம் பாதுகாப்பு காசோலை வாங்கி இவ்வழக்கில் தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. ரூ.20,00,000/- எதிரிக்கு கொடுத்ததற்கு இதுவரை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. ஆவணம் எதுவும் எதிரியிடம் இருந்து வாங்கவில்லை, பணம் கொடுத்த சமயம் காசோலை மட்டும் தான் எதிரி என்னிடம் கொடுத்தார். காசோலையை மட்டும் தான் பிணையாக வைத்து எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K